**செ.வெ.எண்:48** **நாள்:29.11.2018**

# அரியலூர் மாவட்டத்திலிருந்து கஜா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.10 இலட்சம் மதிப்பிலான நிவராண பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டது.

அரியலூர் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டத்திற்குட்டப்பட்ட பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.10 இலட்சம் மதிப்பிலான நிவராண பொருட்கள் ஏற்றி செல்லும் வாகனத்தினை **மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் கொடியசைத்து அனுப்பி வைத்தார்கள்.

**இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் அவர்க் தெரிவித்ததாவது :-**

கஜா புயலினால் ஏற்பட்ட பாதிப்புக்குள்ளான தஞ்சாவூர் மாவட்ட மக்களுக்கு அரியலூர் மாவட்ட பள்ளிக் கல்வித்துறையின் மூலம் ரூ.10 இலட்சம் மதிப்புள்ள உணவு பொருட்கள், படுக்கை விரிப்புகள், போர்வைகள், தார்பாய், புதிய துணி வைககள், தீப்பெட்டிகள், மெழுகுவர்த்திகள் மற்றும் இதர அத்தியாவசிய பொருட்கள் அரியலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம் மூலமாக பள்ளிகளிலும், மாணவ, மாணவிகளிடமும் பெறப்பட்டு, முதன்மைக் கல்வி அலுவலா் தலைமையிலான குழு மூலம் சம்மந்தப்பட்ட மக்களுக்கு வழங்க மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சா் அவா்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது என **மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட முதன்மை கல்வி அலுவலா் அ.புகழேந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) பாலாஜி, மாவட்ட கல்வி அலுவலர்கள் ந.மணிவண்ணன், அரி.செல்வராசு, இரா.வெற்றிச்செல்வி, முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் இரா.பொய்யாமொழி மற்றும் பி.செந்தில், பள்ளித்துணை ஆய்வாளர் இரா.பழனிச்சாமி மற்றும் சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் ஏ.கொளஞ்சிநாதன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**